# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | I.A.10/2024 in O.S.No. 70/2019 | **CNR No.** | : | TNKI13-000120-2019 |
| **Name** | : | கோவிந்தசாமி | **Father's Name** | : | வெள்ளைய கவுண்டர் |
| **Witness for** | : | Respondent | **Calling** | : | RW2 |
| **Age** | : | 69 | **Village** | : | கல்லூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 11:55 AM | **End Time** | : | 12:20 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 02.01.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கிற்கு 3ம் தரப்பினர் ஆவேன். எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாக முன்னிலையாகி நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த நிரூபண பிரமாணப்பத்திரத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரியும். அவை சரியாக இருந்ததால் நான் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் செய்தேன். (ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை).

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். யார் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சுப்பிரமணி தாக்கல் செய்த வழக்காகும். யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால்

சுப்பிரமணிக்கு நிலம் நாங்கள் வாங்கி கொடுத்தோம், அதில் மாணிக்கம் ரோடு போட்டு விட்டார் அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். மாணிக்கம் யார் என்றால் எனது பங்காளி ஆவார். மாணிக்கம் அப்பா பெயர் என்னவென்றால் காவடி பெருமாள் கவுண்டர் ஆகும். எனது தந்தை பெயர் என்னவென்றால் வெள்ளைய கவுண்டர் ஆகும். மாணிக்கம் உடன் பிறந்தவர்கள் யார் என்றால் 3 பேர்கள், ஜெடைய கவுண்டர், மாணிக்கம் மற்றும் ஆறுமுகம் ஆவார்கள்.

(2) மாணிக்கத்திற்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள் ஆகும். முதல் மனைவி பச்சயம்மாள், 2 வது மனைவி சந்திரமதி ஆகும். மாணிக்கத்திற்கும் சந்திரமதிக்கும் பிறந்தவர் தான் சாந்தி என்றால் எனக்கு தெரியாது. சந்திரமதி வருவார் போவார் திருமணம் செய்து கொண்டாரா என்று எனக்கு தெரியாது. மாணிக்கத்திற்கு மகன்கள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். மாணிக்கம் இறந்த பிறகு வாரிசு சான்றிதழ் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பச்சயம்மாளும் சந்திரமதியும் உடன் பிறந்த சகோதிரிகள் என்றால் சரிதான். பச்சயம்மாளுக்கும் மாணிக்கத்திற்கும் திருமணம் ஆகி 10 வருட காலம் குழந்தை இல்லாததால் சந்திரமதியை திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல, திருமணம் செய்யவில்லை.

(3) நான் தாக்கல் செய்துள்ள பிரமாணபத்திரத்தில் உள்ள விவரங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் நான் தான் சொன்னேன். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி மாணிக்கம் என்று எனக்கு தெரியும் என்றால் தெரியாது. இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி யார் 3ம் பிரதிவாதி யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. மாணிக்கத்திற்கும் சந்திரமதிக்கும் ஏற்பட்ட தகாத

உறவின் காரணமாக தான் சாந்தி பிறந்துள்ளார் என்று நான் எனது பிரமாணபத்திரத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். கல்லூரில் யார் யாருக்கு பிறந்தார் என்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம்.

(4) நிலம் வாங்கி கொடுத்ததாக சொல்லும் நிலையில் நான் வியபாரம் பேசினேன் என்றால் ஆமாம். அது பத்திரம் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்த சர்வே எண்ணிக்கு வியபாரம் பேசப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. யார் யார் வியபாரம் பேசினோம் என்றால் நான், சுப்பிரமணி, அருணாசல முதலியார் குமாரர்கள் சந்திரன், ஜீவானந்தம் ஆகியோர்கள் பேசினோம். யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் சந்திரம் மற்றும் ஜீவானந்தம் பெயரில் இருந்தது. மாணிக்கம் பெயரில் கூட்டாக இருந்ததா என்றால் இல்லை. அந்த சர்வே நெம்பரில் மாணிக்கம் ஏதாவது நிலம் கிரையம் பெற்றுள்ளாரா என்றால் இல்லை. எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. கிரைய பத்திரம் செய்யும் பொழுது யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது, பத்திரம் யார் எழுதினார்கள் என்றால் செந்தில் எழுதியிருப்பார்.

(5) **11.10.2013 தேதியிட்ட கிரைய பத்திரம் ஆவண எண்.4004/2013** காண்பிக்கப்பட்டு இதில் பட்டாவில் மாணிக்கம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். இது அவர்கள் மூன்று பேர்கள் பெயரிலும் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மாணிக்கத்தை கேட்டு தான் கிரைய பத்திரம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. கிரையம் பேசப்பட்ட நிலத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. சுப்பிரமணிக்கு முன்பு யார் அந்த

நிலத்தை விவசாயம் செய்தார்கள் என்றால் நடராஜ் முதலியார் குமாரர்கள் தான் விவசாயம் செய்தார்கள்.

(6) சுப்பிரமணி இந்த ஊருக்கு வந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 50 ஆண்டுகள் இருக்கும். எனக்கு கிரையம் பற்றிய விவரங்கள் தெரியாது என்றும் வாதியிடம் பணம் வாங்கிவிட்டு வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(7) **குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai